பதிவு அஞ்சல் மூலமாக:

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), வேலூர் மண்டலம் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை: திரு.ப. வேல்முருகன், பி.இ.,

ந.க. எண்: 318 / 2019 / வேம3

நாள். 26.06.2020

பொருள் : குடிசை மாற்று வாரிய குடியிருப்பு கட்டிடம்– நகர் ஊரமைப்பு துணைஇயக்குநர் அலுவலகம் – வேலூர் மண்டலம் – திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம், வளையாம்பட்டு ஊராட்சி / கிராமம், சர்வே எண்கள். 241/3 –ல் 2.02.0ஹெக்டர் பரப்பு கொண்ட மனையிடத்தில் மனை அனுமதியுடன் தரை தளம் + மூன்று தளங்களுடன் 13 பிளாக்குகள் கொண்ட 528 குடியிருப்பு கட்டிடம் – தொழில்நுட்ப இசைவு அளித்தல்– குறித்து.

பார்வை :

1. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் வேலூர் கோட்டம் நிர்வாகப்பொறியாளர் அவர்களின் கடிதம் எண்.1301/AE(P)/Vlr Dn/2018 dt.31.01.2019 , 02.08.2019 மற்றும் 27.05.2020 .
2. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் வேலூர் கோட்டம் நிர்வாகப்பொறியாளர்அவர்களின்கடிதம் ஏண்.311/உ.பொ.தி/வே.கோ/2019 dt.31.10.2019
3. அரசாணை நிலை் எண்.138, வீட்டு வசதி (ம) நகர்ப்புற வளர்ச்சி துறை (யுடி 4–1), நாள்.4.6.2004.
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21075/09/பிஏ1, நாள். 04.04.2012.
5. மாவட்ட அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி, வேலூர் மாவட்டம் அவர்களின் கடிதம் சான்று மு.மு.எண்.959/ இ1/2019, நாள். 08.02.2019.
6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை–2 அவர்களின் கடிதம் ந.க.எண். 14277/2017/சிபி1, நாள்.14.02.2017.
7. நன்னிலை வரி கட்டணம் கோரப்பட்ட நாள். 15.06.2020.
8. நன்னிலை வரி கட்டணம் செலுத்தப்பட்டு பெறப்பட்ட நாள். 26.06.2020.
9. அரசாணை (நிலை) எண்: 18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்: 04.02.2019

True copy.
10.07.2020

SUPERINTENDING ENGINEER
Chennai-Circle-I
Tamil Nadu Slum Clearance Board
5, Kamarajar Salai, Chennai-600 005

10. அரசாணை (நிலை) எண்.16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்31.01.2020.

11. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 4367/2019/பிஏ2, நாள்.05.02.2020, 06.11.2019

12. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் வேலூர் கோட்டம் நிர்வாகப்பொறியாளர்அவர்களின்கடிதம் எண்.311/உ.பொ.தி/வே.கோ/2019 dt.26.06.2020

13. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 146/2020/டிசிபி8, நாள்.22.01.2020 மற்றும் 01.06.2020.

14. துணை இயக்குநர் சுகாதார பணிகள் திருப்பத்தூர் அவர்கள் கடிதம் ந.க.எண்.7496/அ4/2019, நாள்.19.12.2019

15. வேலூர் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் செயல் முறைகள் கடிதம் ந.க.எண்.பி1/24328/2017–1 நாள்.04.04.2018

16. கோட்டப்பொறியாளர் நெடுஞ்சாலை, வாணியம்பாடி அவர்கள் கடிதம் க.எண்.103/2019/இவஅ நாள்.04.03.2019

.......

**உத்தரவு:**

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம், வளையாம்பட்டு ஊராட்சி / கிராமம், சர்வே எண்கள். 241/3 –ல் 2.02.0ஹெக்டர் பரப்பு கொண்ட மனையிடத்தில் **19956.74** ச.மீ **FSI** பரப்பளவில் குடிசை மாற்று வாரிய குடியிருப்பு கட்டிட மனையிடத்திற்கு " 1 – 24 " வரை என எல்லையிடப்பட்டு மனையிட ஒப்புதலும், அம்மனையில் அமையும்

(வரைபடத்தின் படி)மனையிடப்பரப்பு : **20200.00 ச.மீ**

| Usage | Ground Floor in Sq.m | First Floor in Sq.m | Second Floor in Sq.m | Third Floor in Sq.m | Total in Sq.m |
|---|---|---|---|---|---|
| Residential Block(A1-A6) | 1788.18 | 1788.18 | 1788.18 | 1788.18 | 7152.72 |
| Residential Block(B1-B7) | 3133.13 | 3133.13 | 3133.13 | 3133.13 | 12532.52 |
| Anganwadi (1) | 46.42 | - | - | - | 46.42 |
| Ration Shop | 42.72 | - | - | - | 42.72 |

True copy

SUPERINTENDING ENGINEER
Chennai-Circle-I
Tamil Nadu Slum Clearance Board
5, Kamarajar Salai, Chennai-600 005

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Gym | 69.21 | - | - | - | 69.21 |
| Convenient shops(1+2) | 63.92 | - | - | - | 63.92 |
| Library | 49.23 | - | - | - | 49.23 |
| Total | 5192.81 | 4921.31 | 4921.31 | 4921.31 | 19956.74 |

OSR பரப்பு = 2028.57 ச.மீ

மேலும், மனுதாரரின் உத்தேசம் தொடர்பாக அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் பார்வை 3–ல் காணும் அரசாணையின் படி பார்வை 7–ல் காணும் இவ்வலுவலக கடிதத்தில் கோரப்பட்டதை தொடர்ந்து மனுதாரரால் பார்வை 8–ல் கண்ட கடிதத்தில் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் பெறப்பட்டுள்ளது.

பார்வை 7–ல் காணும் இவ்வலுவலக கடிதத்தில், பொது உபயோக ஒதுக்கீடு திறவிடம் 2028.57 ச.மீ பரப்பளவு இடம் மற்றும் OSR க்கு செல்லகூடிய அணுகு பாதையினை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்க தெரிவிக்கபட்டதினை தொடந்து பார்வை 12–ல் கண்ட தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் வேலூர் கோட்டம் நிர்வாகப்பொறியாளர் அவர்களின் கடிதம் எண்.311/உ.பொ.தி/வே.கோ/2019 dt.26.06.2020 -ல் OSR பரப்பு – **2028.57** ச.மீ மற்றும் OSR க்கு செல்லகூடிய பாதையினை உள்ளாட்சியிடம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என உறுதிமொழி பெறப்பட்டுள்ளதினை தொடர்ந்து மனையிடத்திற்கு மனைஒப்புதலும், மேற்படி குடிசை மாற்று வாரிய குடியிருப்பு கட்டிட வரைபடங்களுக்கு சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பொது நிபந்தனைகளுடன் **க.வ./ந.ஊ.து.இ.(வேம) எண்:14அ,ஆ,இ,ஈ,உ,ஊ,எ,ஏ,ஐ,/2020** என எண்ணிடப்பட்டு கட்டிட அனுமதிக்கான தொழில்நுட்ப இசைவு அளிக்கப்படுகிறது.

**<u>சிறப்பு நிபந்தனைகள்:</u>**

1. நிலையில் உள்ள சுடுகாட்டின் எல்லையிலிருந்து 30மீ க்குள் எவ்விதமான ஆழ்துளை கிணறு (Bore Well) அமைத்து தண்ணீர் எடுக்கப்படாது மற்றும் அப்பகுதியின் வழியாக குடிநீர் குழாய்கள் ஏதும் அமைக்கப்பட மாட்டது என்று தமிழ்நாடு குடிநீர் மாற்று வாரியத்தினிடம் உறுதி மொழி அளிக்கப்பட வேண்டும். மற்றும் பொது மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வசதி செய்து தரப்பட வேண்டும்.

2. **துணை இயக்குநர் சுகாதார பணிகள் திருப்பத்தூர் அவர்கள் கடிதம் ந.க.எண்.7496/அ4/2019, நாள்.19.12.2019 –ன் படி குடியிருப்பிலிருந்து 500மீ தொலைவுக்கு அப்பால் இடுகாடு மற்றும் சுடுகாடு அமைக்கப்பட வேண்டும் . இதனை உள்ளாட்சி உறுதி செய்து கொள்ளப்பட வேண்டும்.**

True copy

SUPERINTENDING ENGINEER
Chennai-Circle-I
Tamil Nadu Slum Clearance Board
5, Kamarajar Salai, Chennai-600 005

3. வரைபடத்தில் எல்லையிடப்பட்ட A முதல் J வரை என எல்லையிட்ட 2028.57ச.மீ. பரப்பளவு OSR பகுதி மற்றும் அணுகு பாதையினை சம்மந்தப்பட்ட உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டு திறவிடமாகவே நிலைநிறுத்தப்பட வேண்டும். மேலும் சம்மந்தப்பட்ட உள்ளாட்சியிடம் ஒப்படைக்கப்பட்டு அதனை உறுதி செய்த பின்னரே இறுதி ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.

4. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.

5. Planning Permission is used in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building rules under the Local Bodies Act However Planning permissions is used subject to the condition that the applicant/ developer and also the Architects/ Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

6. Applicant should obtain consent from Tamil Nadu Pollution Control Board Under Section 25 of the Water Act 1974 for Discharge of Sewage.

7. "நகர் ஊரமைப்பு துறை சட்டபூர்வமாக தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின்பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப் பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

   சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதி படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மூலம் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்பு துறை பொருத்தமான அமைப்பு அல்ல"

8. மத்திய மற்றும் மாநில அரசு துறையினரிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

9. The provisions in the G.O. (Ms) No. 17, Housing and Urban Development (UD4(3)) Department dated: 05.02.2016 relating to installation and use of Solar Energy System should be followed.

True Copy
10.07-2020

SUPERINTENDING ENGINEER
Chennai-Circle-I
Tamil Nadu Slum Clearance Board
5, Kamarajar Salai, Chennai-600 005

10. பார்வை 5-ல் கட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின் படி "The Tamil Nadu Government in G.O.Ms.No. 112, Housing & Urban Development Department dated. 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regultion & Development) Act 2016, The Promoter has to advertise, Market, Book, Sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate project with the Real Estate Regulatory Authority".

11. கட்டுமானங்கள் நடைபெறும் இடத்தில், பொது மக்கள் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில், வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளின்படி, தளப்பரப்பு விகிதம் (FSI) திறவிடங்கள் (Setback) வாகன நிறுத்தம் மற்றும் பலகை நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

**நிபந்தனைகள்:**

1. உத்தேச குடியிருப்பு கட்டிடத்திற்கு Solar Water System அமைக்கப்பட வேண்டும்.
2. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள்.11.10.02-ன் படி உத்தேச கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
3. உத்தேச கட்டிடத்திலிருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும் (ம) பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் இதர தேவைக்கான நீர் வசதிகள் மனுதாரரின் சொந்த செலவில் செய்துகொள்ள வேண்டும்.
4. உத்தேச கட்டிடத்தில் அமையும் குடிநீர் மேல்நிலை தொட்டி (ம) மனையில் அமையும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
5. உத்தேச கட்டிடத்தில் விதிகளின்படி தேவையான தீ தடுப்பு (ம) தீயணைப்பு சாதனங்கள் பொருத்தப்பட வேண்டும்.
6. அரசாணை எண்.341, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள்.3.11.04ன்படி செப்டிக் டேங்கில் 'U' trap அமைத்தல் வேண்டும்.
7. சுற்றுப்புற சூழல் (ம) வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு Fly ash Brick Material பயன்படுத்தப்பட வேண்டும்.
8. Clause 2A of Fly Ash Notifications 2009 "Building Construction Agencies both in public and private shall prescribe the use of fly ash and fly ash products in their respective tender documents, Schedules of specifications and construction applications including appropriate standards and codes of practice and make provisions for the use of Fly Ash and Fly Ash based bricks, blocks or tiles or aggregate of them in the schedule of approved materials and rates".
9. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் ( உண்மை நகல் ) கட்டுமானம் நடைபெறும்போது உத்தேச இடத்தில் பிரசுரிக்கப்படல் வேண்டும்.
10. தற்போது கட்டிட இசைவு வழங்கப்படும் வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது, அவ்வாறு மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருப்பின் இத்துறையின் முன் அனுமதி பெறப்படல் வேண்டும்.

True Copy

RM 10.07.2020

SUPERINTENDING ENGINEER
Chennai-Circle-I
Tamil Nadu Slum Clearance Board
5, Kamarajar Salai, Chennai-600 005

11. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளவாறு வாகன வசதிக்கான நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
12. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள், அதன்படியே நிலை நிறுத்தப்படல் வேண்டும்.
13. உத்தேச கட்டிடம் கட்டப்படும்போது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் ஒயரிங் செய்யப்பட வேண்டும்.
14. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் அசல் நகலுடன் மற்றும் இவ்வாணையின் நகல் வாங்குபவர்களுக்கு வழங்க வேண்டும்.
15. மாவட்ட அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி, வேலூர் மாவட்டம் அவர்களின் கடிதம் சான்று மு.மு.எண்.959/ இ1/2019, நாள். 08.02.2019.–ல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளையும் நிறைவு செய்யப்படல் வேண்டும்.

மேற்காண் நிபந்தனைகளுடன் குடிசை மாற்று வாரிய குடியிருப்பு கட்டிடத்திற்கான தொழில்நுட்ப இசைவு அளிக்கப்பட்ட கட்டிட வரைபடங்கள்–2 முத்திரையிடப்பட்டு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

எனவே, **வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம்,** அவர்கள் மேற்காணும் கட்டிட அனுமதிக்கான இறுதி உத்திரவினை மனுதாரருக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

மனுதாரர் மேற்கொண்டு உத்திரவினை **வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம்,** அவர்களை அணுகி பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறார்.

மேலும், குடிசை மாற்று வாரிய குடியிருப்பு கட்டிட அனுமதிக்கான தொழில்நுட்ப இசைவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை சான்றினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ),
வேலூர் மண்டலம்.
24/6/20

இணைப்பு –
இரண்டு தொகுப்பு வரைபடங்கள்

பெறுநர் :
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) ,
வளையாம்பட்டு ஊராட்சி,
ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம்,
வாணியம்பாடி வட்டம்,
திருப்பத்தூர் மாவட்டம்.

நகல்:
நிர்வாகப்பொறியாளர் ,
தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரியம் ,
வேலூர் கோட்டம் ,காட்பாடி வட்டம்,
வேலூர் – 632006

True copy
10.07.2020

SUPERINTENDING ENGINEER
Chennai-Circle-I
Tamil Nadu Slum Clearance Board
5, Kamarajar Salai, Chennai-600 005

ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம் வளையாம்பட்டு ஊராட்சி தனி அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை: திருமதி. ச. வசந்தி,

ந.க. ஆ1/958/2020

நாள் : 07.07.2020.

பொருள்: நீல வரைபடம் ஒப்புதல் - திருப்பத்தூர் மாவட்டம் - ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம் – வளையாம்பட்டு ஊராட்சி – கிராம சர்வே எண்.241/3 –ல் 2.02.0 ஹெக்டர் பரப்பில் உள்ள மனையில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றும் வாரியத்தின் மூலம் அமைய உள்ள கட்டுமானத்திற்கு, 13 பிளாக்குகளில் G+3 தளங்களுடன் மொத்தம் 528 வீடுகள் கட்டிக்கொள்ள நீல வரைபடம் அங்கீகாரம் மற்றும் அனுமதி அளித்து உத்திரவிடுதல் - தொடர்பாக.

பார்வை:
1) நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றும் வாரியத்தின், வேலூர் கோட்டம், என்பவரின் விண்ணப்ப நாள்: 22.06.2020.
2) மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்-III, அறிக்கை நாள்:02.07.20.
3) அரசாணை எண்: 255/ஆர்டி (சி2) நாள்: 18.08.1997.
4) தமிழ்நாடு ஊராட்சி சட்டம் 1994, ஊரக வளர்ச்சித்துறை, சென்னை- டி.ஓ. கடிதம் எண்: 132109/07 டி.ஆர்.டி/பி.சி.ஏ. நாள்: 14.02.1997.
5) ஊராட்சி தீர்மான எண்: 281 நாள்: 02.07.2020.
6) நிர்வாக பொறியாளர் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றும் வாரியம், வேலூர் கோட்டம், அவர்களின் கடித ந.க.எண்: 137/ஆர்2/வேகோ/2020.
7) உதவி பொறியாளர் ஊராட்சி ஒன்றியம் ஆலங்காயம் அறிக்கை நாள்: 06.07.2020.

*************

உத்திரவு:

ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம், வளையம்பட்டு ஊராட்சி, கிராம சர்வே எண்.241/3 –ல் 2.02.0 ஹெக்டர் பரப்பில் உள்ள மனையில், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றும் வாரியத்தின் மூலம், 13 பிளாக்குகளில் G+3 தளங்களுடன் மொத்தம் 528 வீடுகள் கட்டுமானத்திற்கு, கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு நீல வரைபடம் அங்கீகாரம் மற்றும் அனுமதி வழங்கி உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்:

1) இந்த நீல வரைபட அனுமதி 07.07.2020 தேதியில் அனுமதிக்கப்பட்டு 06.07.2021 தேதி வரை அமுலில் இருக்கும்.

2) இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின்படிதான் கட்டிடம் கட்டப்பட வேண்டும். மேற்படி வரைபடங்கள் தனி அலுவலர் மற்றும் இது சம்மந்தமான அலுவலர்கள் பார்வையிடும்படி பிரேம் போட்டு வைக்கவேண்டும்.

3) வரைபடத்தில் உள்ள அளவுகள் அல்லாமல் மாற்றி தன் சௌகரியப்படி கட்டிடம் கண்டிப்பாக கட்டக்கூடாது. அவ்வாறு கட்டிடம் கட்டுவது தெரியவந்தால் நீல ரைபட அனுமதி எவ்வித முன் அறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்படும்.

4) கட்டப்போகும் கட்டிடத்தில் வேறு எவ்விதமான விஸ்தரிப்போ அல்லது கூடுதல் கட்டுமானம் செய்ய நேரிட்டால் அதற்குரிய திருத்தப்பட்ட வரைபடங்களுடன் தனி அலுவலர் அவர்களுக்கு எழுத்து மூலமாக விண்ணப்பம் செய்து அனுமதி பெற்று கட்டிடம் ஆரம்பிக்க வேண்டும்.

5) வாசற்படிகள், ஜன்னல்கள், வெண்டிலேட்டர்கள், கைப்பிடிகள் மற்றும் பால்கனி முதலியவைகள் சொந்த நிலத்தில் எல்லைக்கு உட்பட்டு இருக்கவேண்டும். ஊராட்சி அல்லது அரசினர் இடத்தில் எந்தவிதமான ஆக்கிரமிப்பும் இல்லாமல், தெருவில் இருந்து நான்கடி உட்பக்கத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

SUPERINTENDING ENGINEER
Chennai-Circle-I
Tamil Nadu Slum Clearance Board

6) சமையலறையில் புகை வெளியே போக சரியான வசதியான புகைக்கூண்டு தடுத்துக்கட்ட வேண்டும்.

7) சாதாரணமான முறையில் செப்டிக் டேங்க் கழிவறை ஆகிய வசதிகள் கட்டிடப் பொறியாளரின் சரியான அளவுகள் படியும் கட்ட வேண்டும்.

8) செப்டிக் டேங்கில் உள்ள கழிவுநீர் பொது சுகாதாரத்திற்கு சீர்கேடு ஏற்படா வண்ணம் கட்டப்பட வேண்டும்.

9) காற்று வசதிக்கும் உண்டான ஜன்னல் வெண்டிலேட்டர் போதிய அளவு அமைக்க வேண்டும்.

10) மேற்படி கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டவுடன் ஊராட்சிக்கு வரிவிதிப்பிற்கு விண்ணப்பித்துக்கொள்ள வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் வேலைகள் முடிக்காவிட்டால் மீண்டும் விண்ணப்பித்து மறு உத்திரவு பெற்றுக்கொள்ள வேண்டும். அப்படி மறு உத்திரவு பெறாமல் எந்த ஒரு விதமான கட்டிட வேலையும் செய்யக் கூடாது.

11) கட்டிடத்தை சுற்றி பலன் தரும் செடிகள் வைக்கப்பட வேண்டும்.

12) மழைநீர் சேகரிப்பு தொட்டி 1 மீட்டர் நீளம், 1 மீட்டர் ஆழம் மண்வேலை செய்து இதில் செங்கற்களைக் கொண்டு மழைநீர் சேகரிப்பு தொட்டி கட்டி தொட்டியினுள் மணல் 1 அடி கனம் மற்றும் 20.மி.மீ. அளவுள்ள செங்கல் 1 அடி கனம் நிரப்பி வைக்க வேண்டும்.

13) மேற்படி கூறியுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கட்டிடத்திற்கு மட்டும் உபயோகப்படுத்த வேண்டும். வேறு காரியத்திற்கு எதுவும் பயன்படுத்தக்கூடாது.

14) பார்வை 6-ல் கண்டுள்ள நிர்வாக பொறியாளர் கடிதத்தின்படி பணி நடைபெறும் இடத்தில் உள்ள அங்கிகரிக்கப்பட்ட நீலவரை படத்தில் அமைந்துள்ள OSR நிலத்தினை (2028.57 ச.மீ) தமிழ்நாடு குடிசைப்பகுதி வாரியத்திலிருந்து ஒப்புதல் பெற்று ஊராட்சிக்கு தானம் பத்திரம் மூலம் பதிவு செய்து ஒப்படைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே 30.09.2020 -க்குள் OSR நிலம் ஒப்படைக்கப்பட வேண்டும். இல்லை எனில் இந்த உத்திரவு இரத்து செய்யப்படும் என அறிவிக்கப்படுகிறது.

15) மேலும் தொழிலாளர் பங்கு தொகையை பணிகள் முடிந்தவுடன் மொத்த செலவின தொகையில் 1% செலுத்தப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் கட்டுமானத்தின் மொத்த திட்ட மதிப்பீட்டில் 1% -னை (ரு.3159722/-) "The Manual Workers General Welfare Fund, Union Bank of India, Chennai. Account No.53060101003 8239, IFSC No.UBIN0553069" என்ற வங்கி கணக்கிற்கு செலுத்தி அறிக்கையினை இவ்வலுவலகத்திற்க்கு அனுப்ப வேண்டுமென தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு: 1.மனுதாரருக்கும் வரைபடம் -1.

7/7/2020

தனி அலுவலர்/ வட்டார வளர்ச்சி அலுவலர்(கிஊ),
வளையாம்பட்டு ஊராட்சி
ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம்.

பெறுநர்

நிர்வாகப்பொறியாளர்,
தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்,
வேலூர் கோட்டம்,
வேலூர் - 632006.

True Copy
10.07.2020
SE I CC
SUPERINTENDING ENGINEER
Chennai-Circle-I
Tamil Nadu Slum Clearance Board
5, Kamarajar Salai, Chennai-600 005